# தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஞு தை மீ 29௳ (11-2-'23.) | ப. 40.


விஷய அடக்கம்.


1. உலக நடை ... 417

(உதவி பத்திராதிபர்)

2. திரௌபதியும் சத்யபாமையும் 418

3. எனது பாட்டியார் ... 419

4. வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள் ... 420

[K. R. R. சாஸ்திரி, M. A. F. R. Econ. S.]

5. நான் கண்ட காக்ஷி ... 421



தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

| உள் நாடு. | வெளி நாடு. |
|---|---|
| ½-வருஷம் ரூ. 3 0 0 | ½-வருஷம் ரூ. 3 8 0 |
| 1-வருஷம் ரூ. 5 0 0 | 1-வருஷம் ரூ. 6 0 0 |

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.


## உலக நடை

[உதவி பத்திராதிபர்]

நமது மாகாண சட்ட ஸபைகளும் இந்தியா சட்ட ஸபையும் பல சட்டங்களை இயற்றி வருகின்றன. தேச நன்மைக்கு இடையூறுகளாக இருப்பனவற்றை சீர்திருத்தியும், வியவகாரங்களுக்கு இடந்தரும் சிக்கல்களை ஒழுங்கு படுத்தவும் சட்டங்கள் நிர்மாணிப்பதன் கருத்தாகும். நமது ஸபைகள் இயற்றும் சட்டங்களோ சிக்கல்களையும் இடையூறுகளையும் அதிகப்படுத்துகின்றன. சட்டஸபை பிரதிநிதிகளோ தேச ஸேவையைச் செய்வதாக பறை சாற்றி ஜாதி வித்தியாஸம் கட்சி பேதங்கள் முதலியவைகளில் ஈடுபட்டு சுய நலத்தையும் தற்சிறப்பையும் நாடுகிறார்கள்.

* * *

அதிகாரி வர்க்கத்தினரும் ஆட்சி புரியும் ஜாதியார் என்று விசேஷ கௌரவம் கொண்டாடும் ஆங்கிலேயர்களும் இந்தியரிடம் பூண்டிருக்கும் மனோபாவத்தை ஒருவாறு அறியலாம். குற்றச்சட்டத்தில் ஜாதி பேதக்குறைகளை திருத்துவதிலும், ஸிவில் ஸர்விஸ் கமிஷன் விஷயமாயும் கெனியாவில் குடியேறிய இந்தியரின் நிலையைப் பற்றியும் ஆங்கிலேயர்கள் பிரஸங்கங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் வெளியிடும் அபிப்பிராயங்களெல்லாம் இந்தியருடைய மனதை வருத்துகின்றன. உள்ளன்பும் உண்மை நியாயமும் இல்லாத ஆங்கிலேயருடன் எவ்விதம் இந்தியர் ஒத்துழைப்பார்.

துருக்கியர் சமாதான உடன்படிக்கையின் பலபகுதிகளுக்கு ஒப்புக்கொள்ள இணங்கிவிட்டார்கள். துருக்கியின் பொருளாதார நிலைக்கு கேடு விளைவிக்கக்கூடிய ஷரத்துகளுக்குத் தான் ஆக்ஷேபணைகள் இருந்து வருகின்றன. இவ்வாக்ஷேபணைகளால் பரஞ்சுக்காரரே அதிகமாய் வருந்துகிறார்கள். இவைகள் தீர வெகு காலமாகும் என்று ஊஹிக்கப்படுகிறது. அன்னியர்களின் விசேஷ உரிமை விஷயமாய் துருக்கியர் ஒருவாறு உடன்பட்டு விட்டாலும் அந்த ஷரத்துகளின் அர்த்த வாதம் நாளடைவில் ஏற்பட்டே வரும். வாதம் ஏற்படும்போதெல்லாம் இருபுறத்திலும் ஸைந்நிய பலங்கள் பரந்து காணும். இஃதல்லவோ ஐரோப்பிய ராஜதந்திரம்.

* * *

ஆங்கிலேயர் மோஸூல் பிரதேச ஆட்சி விஷயமான முடிவை ஸர்வதேச ஸங்கத்திடம் ஒப்புவித்து விட்டார். ஸர்வதேச ஸங்கத்தில் சேர்ந்திராத துருக்கி அச்சங்கத்தின் முடிவுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டுமாம். பாரிஸ் மகாநாடு யுத்த நஷ்ட ஈடு விஷயமாய் ஓர் முடிவுக்கு வராமல் கலைந்த போது இவ்விஷயத்தை ஏன் ஸர்வதேச ஸங்கத்தினிடம் ஒப்படைக்கக் கூடாது. சங்கத்தில் அங்கத்தினராக இருக்கும் ப்ரஞ்சுக்காரரை கட்டுப்படுத்தி வல்லரசுகள் ஸர்வதேச ஸங்கம் மூலமாக சமாதானத்தை நிலை நிறுத்த முற்பட வில்லையே. சில விஷயங்களில் மட்டுந்தான் ஸர்வதேச ஸங்கத்தை நாடுவது என்றிருந்தால் ஸர்வதேச ஸங்கத்தின் பெருமையை புகழ்ந்து பேசுவோரின் கருத்து எத்தகையது.


சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில் ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

## திரௌபதியும் சத்யபாமையும்.

பாண்டவர்களின் ராஜ்யஸ்ரீயைப் பார்க்க பொறாத துர்யோதனாதிகள், தர்மபுத்ரரை பாச்சிகை ஆட்டத்தில் வஞ்சித்து, அவர்களை 13-வருடம் கொடிய விலங்குகள் வாழும் கானகத்தில் வசிக்கும்படியும் 14ம் வருடம் ஒருவரும் அறியா வண்ணம் காலங்கழித்து வரவேண்டுமென்று உறுதிமொழி வாங்கிக்கொண்டு, தர்மபுத்ராதிகளை சகல ராஜ்ய ஸம்பத்தையும் துறக்கச்செய்து, தர்மபத்னியான திரௌபதியை மட்டும் துணையாகக் கொண்டவர்களாய் காட்டுக்கு அனுப்பியதும், இச்சங்கதியானது காற்றைப்போல் எங்கும் பரவ, கிருஷ்ண பகவானும் அதை கேள்வியுற்று மிகுந்த விசனமடைந்தவராய் தன் மனைவியான சத்யபாமையுடன் விரைந்து பாண்டவர்களை சமாதானம் செய்யும் பொருட்டு இவர்கள் வசிக்குமிடம் நோக்கி வர, தர்மபுத்ராதிகளும் அவரைக் கண்ணுற்று, ஆநந்த வெள்ளம் புரள வரவேற்று, தங்கள் துயரை ஒருவாறு மறந்து நின்றனர். சத்யபாமையும் திரௌபதியை பலவகை விநோத மொழிகளாலும் அன்பார்ந்த வசனங்களாலும் ஒருவாறு தேற்றி, இருவரும் கலந்து உரையாடிக் கொண்டிருக்கும் ஓர் சமயத்தில் பின்வருமாறு வினவினள்.

பிரிய சகியே! திரௌபதி! வெகுநாட்களாய் உன்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டுமென்று என் மனம் தூண்டுகிறது. அந்த அவாவை நான் எவ்வளவு அடக்கியும் என்னை மீறி முன் எழுகின்றது. ஐந்து இந்திரர்களுக்கு ஒப்பான குந்தி புத்ரர்களை நீ எவ்வித உபாயம் கொண்டு உபசரித்து நிற்கின்றனை? அவர்கள் ஒவ்வொருவரும் உன் மீது வைத்திருக்கும் அன்பை நோக்குங்கால், என்மனம் ஆச்சரியங் கொள்கின்றது. உன் சிறிய சொல்லிற்கும் அவர்கள் அடிமைகளாய் நிற்பது எங்ஙனம்? தேவர்களுக்கும் அஞ்சாத அவர்கள் உன் மனம் வெறுப்புக் கொள்ள ஐயமுறுகின்றனர். உன் அன்பை அதிகமாய் கொள்ளை கொண்டவன் யாவன் என்ற ஐயம் எழாமலும் அதற்காக அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் பகைமை பாராட்டாமலும் எப்படி காக்கின்றாய்? உன்னிடம் ஐவரும் ஒன்று போல் ஒழுகுவது அவர்களின் சகோதர வாத்ஸல்யத்தின் பெருக்கோ, அல்லது உன்னிடமிருக்கும் அற்புத சக்தியின் அதிசயமோ? என் ஒப்பற்ற அழகினாலும், இனிய மொழிகளாலும் ஒருவரான என் கணவனை வச்யம் செய்ய இயலாதவளாய் பரிதபித்து ஏக்கங் கொள்கிறேன். அப்படியிருக்க, சகோதரியே! நீ மட்டும் எந்த உபாயத்தால், அல்லது எந்த மந்திரத்தின் சக்தியால், எந்த ஔஷதத்தின் பெருமையால் வசீகரித்தனையோ யான் அறிகிலேன். அவ்வித உபாயத்தை உன் பிரிய சகியான எனக்கு எடுத்துரைப்பாய் என்றதும்,

திரௌபதி சிறிது புன்னகை கொண்டு, சத்யே! இவ்விதம் நீ கேட்பது நீதியாகுமோ? ஓர் அறியாபேதைப் பெண் கூறும் மொழிகளோ கண்ணனுடைய பிரியையான, உன் வாயினின்றும் நான் கேட்பது, நன்று! நன்று! யாவற்றையும் அறிந்த நீயும் ஏனோ இவ்விதம் பிதற்றுகின்றாய். மருந்தினாலும், மந்திரத்தினாலும் கணவனை வச்யம் செய்வது துஷ்ட ஸ்திரீகளுக்கு பொருந்துமே அல்லாது உன் போன்ற உத்தமிகளுக்கு அழகாகுமோ. நானும் அவ்வித உபாயங்கள் ஒன்றும் செய்தறியேன். ஔஷத, மந்திர பிரயோகங்கள் அவர்கள் திடகாத்திரத்தை அழிவுறச்செய்து பித்தர்கள் போல் ஆக்குமே ஒழிய நம்மிடம் ஆற்றொணா ஆசை வைக்கச் செய்யுமோ. என் மனதாலும், வாக்காலும் பதியே தெய்வமாய்க் கொண்டு, அவர்கள் அன்பே என்னுயிர் நிலையாய்க் கொண்டு உபசரித்து வருகின்றேன். அவர்கள் முகம் மாற யான் பொறேன். அவர்கள் ஒவ்வொருவர் நோக்கத்தையும் அறிந்து அதன்படி நடந்துவருகிறேன். அவர்கள் துயருற்று தோன்றினால் என் மனமும் அவ்விதமே விசனத்தில் ஆழ்ந்துவிடும். அவர்கள் சந்தோஷத்தையும் பகிர்ந்து நிற்பேன். ருசியுள்ள அன்னபானாதிகளால் உபசரித்து அவர்கள் வெளியிற் செல்லும் வரை என் துயரை அடக்கிக் கொண்டு மலர்ந்த முகத்துடன் விடை அளித்து வீட்டுள் செல்வேன். அவர்கள் வீடு திரும்பியதும் சிறுநகை மொழிகளால் அவர்கள் துயரை மறக்கச் செய்து ஆநந்தங் கொள்ளச் செய்வேன். அவர்கள் உறங்கும் மட்டும் யானும் கண்மூடேன். அவர்கள் நித்ரை கொள்ளாமல் ஏக்கமுற்று இருப்பின் நானும் உறங்கேன். மகாவீரர்களான இவர்களை புத்ர பாக்கியமாய்ப் பெற்ற என் மாமியான குந்தீ தேவியை எனதன்னையைப் போல் நேசித்து, என் தோழியாய் என் அந்தரங்கங்களைப் பகிர்ந்து, தெய்வம் போல் வணங்கி அவர்கள் அன்பின் ஆதரவில் ஈடுபட்டு என் கஷ்டங்களை ஒருவாறு மறந்து நிற்பேன். எவ்விதம் நாட்டில் என் கணவர்கள் அன்னபானாதிகளாலும் இன்னும் மற்றுமுள்ள அநேக கைங்கரியங்களினாலும் உபசரிக்கப்பட்டிருந்தனரோ அவ்விதமே என் இரு கைகளால் சிறிதும் சலிப்படையாமல் உபசரித்து பின் எடுத்த ஜன்மத்தை புனிதமாக்கிக் கொள்கிறேன். அவர்கள் விரும்பாத ஓர் மனிதரையோ அல்லது விஷயங்களையோ நான் கனவிலும் விரும்புவதில்லை. நான் ஓர் ராஜகுமாரி என்ற செல்வத்தின் செருக்கு என் மனதை ஒருபோதும் அடிமையாக்கி, என் கணவர்களுக்கு யான் செய்யும் பணிவிடைகளுக்கு இடையூறாய் நிற்பதில்லை. அவர்கள் செய்யும் எல்லாக் காரியங்களும், நினைக்கும் ஒவ்வொரு எண்ணங்களும், செல்லும் இடங்களும், யாவற்றிலும் நான் அறியாதது ஒன்றுமில்லை. குடும்ப பாரத்தையே என்னிடம் ஒப்புவித்து விட்டு பாண்டவர்கள் கவலையின்றி சஞ்சரிக்கின்றனர். அவர்கள் செய்யும் ஒவ்வொரு ஆலோசனையிலும் நானும் சேர்க்கப்படுவேன். இரவும் பகலும் அவர்கள் சுகமே எனவிரதமாய்க் கொண்டு காலங்கழிக்கின்றேன். இந்த்ராதி தேவர்களை காண்பேனாயினும் என் மனது சிறிதும் சலிப்பதில்லை. இவ்வுலக முழுவதும் எனக்கு அளிப்பதாய் இருந்தாலும் அவர்களை விட்டு கணமேனும் பிரிந்திருக்க நான் சகியேன். இவ்விதம் என்னையே நான் புகழ்ந்து கூறுவது சகியான நீ வினவியதாலேயே அல்லாது, என் குணங்களைக்கண்டு, செருக்கடைந்து பிதற்றிய தல்ல வென்று நன்குணர்வாய். ஆதலால், என் பிரிய சகோதரியே! நீ சந்தேகித்தபடி நான் ஓர் மந்திரிவாதியுமல்ல, வைத்தியச்சியுமல்ல. பரிபூர்ணமான அன்பினாலும் அவர்களிடம் எனக்கிருக்கும் பக்தியாதிசயத்தினாலுமே அவர்கள் என்சொல்லிற்கு இணங்கி என்னிடம் மட்டில்லா காதல் கொண்டு ஒழுகுவதும். இனி ஏதாவது சந்தேகமிருக்குமாயின் கூறுவாய் என்றனள். சத்தியபாமை வெட்கி தலை குனிந்தவளாய், திரௌபதி! நீயே உலகத்தில் ஸ்திரீகளில் சிறந்தவள். நான் உன் உண்மை சத்தியறியாது மோசம்

போனேன். உன்னை சாமான்யமானவளாய் எண்ணிக் கேட்ட கேள்விக்கு என்மீது சினங்கொள்ளாது மன்னிப்பாய் என்றதும் திரௌபதி அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு ஒருக்காலும் நீ கேட்டதிற்காக நான் வெறுப்புக் கொள்ளேன் என்று சமாதானம் செய்தனள்.

பிறகு சில நாட்கள் சென்றதும், கிருஷ்ண பகவான் பாண்டவர்களிடம் விடை பெற்று, சதயபாமையுடன் நான்கு வெண்புறவிகள் பூட்டப்பெற்ற கோடி சூரியனுக் கொப்பான ரதமேறி துவாரகையை நோக்கிச் செல்கையில் தன் மனைவியை நோக்கி சிரித்து புன்னகையுடன் சொல்லலுற்றார்.

பிரியே! திரௌபதியிடம் கணவனை வசயம் செய்யும் மந்திரத்தை உபதேசம் பெற்றனையோ? அவள் உபயோகித்த ஔஷதத்தின் முறையை உன்னிடம் உரைத்தனளோவென சத்யபாமையும் எல்லாமறிந்த பரமாத்மாவான கண்ணனிடம் ஒன்றையும் ஒளிப்பது முடியாத காரியம் என்றும் இம் மூவுலகில் "அவனன்றி ஓர் அணுவும் அசையா" என்பதையும் நன்குணர்ந்தவளாய், விசாலமான கண்ணனின் மார்பில் தன் மதிமுகத்தை வெட்கத்தினால் மறைத்துக் கொள்ள பேதையான அவளை இன்னும் வருத்துவது அழகல்ல என்று எண்ணியவராய் கிருஷ்ணன் அவளை மார்புறத் தழுவிக் கொண்டார்.

---

## எனது பாட்டியார்.

[ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி ஆங்கிலத்தில் எழுதிய "பேப்பர் போட்ஸ்" (Paper Boats) இலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.]

(முன் தொடர்ச்சி.)

நாம் இதுகாறும் இவ்வேக குடும்பத்தை ஆளும் அரசியைப் பற்றிக் கூறினோம். இனி அவ்விராஜ்யத்தைப் 'பற்றியோ வெனில்—ஒற்றுமையுள்ள ஒரு ஹிந்து குடும்பத்தைக் காட்டிலும் ஏற்றத் தாழ்வு என்ற அபசாரமற்று, மிக்கத் திறமையுடன் நீதி நெறி செலுத்தப் பெறுவது இவ்வுலகில் வேறெதுவுமில்லை. அக் குடும்பம் பாரம்பரையாய் வாசம் செய்துவரும் கிருஹத்தில் புராதன வழக்கங்களும், ஐதீகங்களுமே காணப்படும். ஒவ்வொரு மூலையிலும் எட்டுக்கால் பூச்சிகள் கூடுகட்டி பட்டுபோலொத்த வலைகளை பின்னியிருப்பதைக் காணலாம். அரிசி கலம் கால் ரூபாய் விற்று செழித்திருந்த நாளில் என் பாட்டியாருடைய பாட்டனார் கட்டியது அவ்வீடு. பனைமரத்தாலாகிய சாத்தும் மூங்கில் குறுக்குக் கிராதிகளையுமுடைய அப்பழைய வீட்டின் விசாலமான முற்றங்களையும், நீண்ட கூடங்களையும், சாளரங்களற்ற அறைகளையும் நோக்கும் பொழுதே கிராம வாசத்தின் முக்கிய சாராம்சம் எது என்பது நமக்கு நன்கு புலப்பட்டுவிடும். செல மணிலாவது, சைகையிலாவது செட்டும், செல வில் ஒரு கட்டுப்பாடும் அங்கு நம்மால் கண்டுபிடிக்க இயலாது. வெகுகாலத்திற்கு முன்பே இறந்து வேற்றுலகம் சென்ற மூதாதையரொருவர் கட்டிக் தவலையுடன் போற்றிவந்த அவ்வீட்டை என் பாட்டியார் மிக்க அருமையுடனும், ஆசையுடனும் காப்பாற்றி வருகின்றாள். என் சௌக்கியத்திற்கும், என் வம்சத்தின் பெருமைக்கும் இருப்பிடமாக, யாவற்றினும் அருமையாய் நான் கொண்டிருப்பது கரிகாய்களிட்டுப் பயிராக்கப்பட்ட கொல்லையுடன் கூடிய எங்கள் வீடேயாகும். அதுதான் குடும்பத்தின் செல்வத்தை பல தலைமுறையாயினும் வற்று வண்ணம் காக்கின்றது. ஒற்றுமை வாழ்க்கையின் பொருட்டுத் தேவையானவற்றை இட்டு நிரப்புவதற்கும் மேற்பட்ட செல்வம் அதற்குண்டு. பழைய வழக்கங்களைப் புறக்கணித்து காலத்தையொட்டி நடப்பவனான பேரனும் தற்கால மாதிரிக்கிணங்கி அதை இடித்துக் கட்டக் கனவிலும் துணியமாட்டான். ஏனெனில், சுகாதார நூலின் முறையைத் தழுவியே அவன் அவ்விதம் செய்வதாயிருப்பினும், அது அவன் பக்தி யின்மையை விளக்குவது மன்றி வெகுகாலமாய்த் தங்கி நின்ற குடும்பத்தின் அதிர்ஷ்டத்தைப் பெயர்க்க வழியுண்டாக்கி விடும் என்ற பயம் அவனுக்கு நிரம்ப விருக்குமல்லவா? ஆகவே, முன்னோரால் கட்டிவைக்கப்பட்ட அவ்வீடு எக்காலத்தும் சிறிதும் பின்னப்படுத்தப்படாமல், தலைமுறை தலைமுறையாய் அதில் வாழ்ந்து வருபவர்களுடைய ஹிருதயத்தில் ஒரே விதமான நம்பிக்கையும், பெருமையும் உதிக்கச் செய்கின்றது. ஆசார சுத்தத்துடனும், பக்தி மார்க்கத்துடனும், என்றும் ஒரு சீராய் வாழ்நாட்களை கழிப்பதற்கும் பரிசுத்தமான தினசரி ஸத்காலக்ஷேபத்திற்கும் அதுவே இருப்பிடமாயும், பிறப்பிடமாயுமுள்ள தென்று நாம கூறலாம்.

வாழைக்கொத்தைப்போல பன்னிரண்டுபெயர்களுக்குக் குறைந்து கௌரவம் பொருந்திய ஒரு ஹிந்து குடும்பத்தை நாம் காண்பதரிது. அவ்விதமே என்னுடைய குடும்பமும், தன்னுடைய எண்பதாவது வயதிலும மிக்கச் சுறுசுறுப்புடன் விளங்கும் என் பாட்டியாரிலிருந்து தொடங்கி, தொட்டிலில் காலையுதைத்துக் கத்திக் கொண்டிருக்கும் அவளுடைய ஒரு மாதத்துக் கொள்பேரனுடன் முடிவடைகின்றது. இப் பரிசுத்தமான வாழ்க்கையினின்பத்தைப் பின்னும் சந்தோஷகரமாகச் செய்ய, இளமையும், சௌந்தரியமும், முதுமையும், அறிவும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. சகோதரர், சகோதரிகள், பெண்கள், நாட்டுப்பெண்கள், பிள்ளைகள், பேரன்மக்கள் முதலிய யாவரும் அலையில் சேர்ந்தோடும் நீர்த்திவிலைகள் போன்று ஒருமிக்க வாழ்ந்து வருகின்றார்கள். ஆயினும், ஒவ்வொரு சமயங்களில், அற்ப விஷயங்களின் பொருட்டும், அவர்களி லொவ்வொருவரும், பெரும் சுழல்காற்றின் மத்தியஸ்தலமோவென பார்பபவர் திகைக்குமாறு மாறிவிடுவார்கள். ஆனால் என் பாட்டியாருடைய ஒரு சிறுசைகை மாத்தலில் அக்குடும்பம் மீண்டும் சந்தோஷமும், அமைதியுமுற்றதாய் விடும். பிரதிதினமும் நடைபெறும் விவகாரங்களில் ஒவ்வொருவரிட மிருந்து வெளிப்படும் குணவிசேஷங்களினால் அக்குடும்பமே சிறப்படைகின்றது. மந்தபுத்தியை யுடையவர்களும், கூரிய அறிவு பெற்றவர்களும், ஒருவர் மற்றொருவரிடமிருந்து கற்கவேண்டியவைகளைக் கற்றுக் கொள்ளுவார்கள். சிறியவர்கள் பெரியவர்களிடமும் பெரியவர்கள் சிறியவர்களிடமும் பயின்றுவர, இவ்விதமாக, முன்னும் பின்னும் சம்சாரமாகிய தறியில் குறுக்குநூல் ஓடவும், அவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து மானிட வாழ்க்கை யென்னும் ஈசுவரனுடைய அவ்வாடையை நெய்து வருபவர் போலிருக்கின்றனர்.

பிராசீன வழக்கங்களைச் சிறிதும் மாற்றாது கடைப்பிடித்து ஒழுகுவது இவ்வொற்றுமைக் குடும்பமொன்றே. தேன்கூட்டிலுள்ள தேன் தனி

த்தனியாய் வெவ்வேறு அறையில் வைக்கப்பட்டிருந்தும், உள்ளுக்குள் ஒன்று சேர்ந்திருப்பது போலே, இக்குடும்பத்திலும் அன்பு நிறைந்து பெருகுகின்றது பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் நாம் பயின்று வருவதன்பொருட்டு மகரிஷிகளால் அமைக்கப்பட்ட வித்யாசாலை போன்ற அதில், ஒரு தலைமுறையாரும் விழலுக்கிறைத்த நீரெனத் தங்கள் வாழ்க்கையைத் துறந்து செல்லாது, தங்கள் அனுபவத்தினின்றும், செயல்களினின்றும் பயனை, பின்வரும் சந்ததியார் அடைந்துணரும்படி விட்டுச் செல்லுகின்றனர். அவ்விதமே, ஏற்றத்தாழ்வு என்ற பேதமற்று, திரவியமுள்ளவர், திரவியமற்றவர், சம்பாதிப்பவர், சம்பாத்தியமற்றவர், விசேஷ புத்திர பாக்கியமுள்ளவர், அப்புத்திரப்பேறற்றவர், இவ்வனைவரையும் என்றும் ஒருவிதமாய் எங்கள் பாட்டியார் நடத்தி வருகின்றார்.

ஈசன் படைத்தவர் யாவரும் உலகில் சமமென்னும் கொள்கையானது இவ்வேக குடும்பத்தில் தான் பல நூற்றாண்டுகளாய் விளக்கிக் காட்டப்பட்டு வருகின்றது. ஒரே ஸாதகத்தின் பொருட்டு அனைவரும் சமநிலைமையில் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கு இவ்வாற்றமைக் குடும்பமே உபமானமாகும். வெகு நேர்மையாய் அமைக்கப்பட்டுத் திறமையுடன் நடத்தப்பெறும் அதன் முக்கிய கொள்கைகளாவன, பொறுமையுடன் அடக்கமும், ஒழுக்கமுமாம். எப்பொழுதும் மோக்ஷமார்க்கத்தைத் தரும் உயர்ந்த நோக்கங்களுடன் அது எந்நாளும் பசுமை மாறாத ஆலவிருக்ஷம் போல் தழைத்து, உயர்ந்ததோர் ஸ்தூபியைக் காணும்பொழுதுண்டாகும் வியப்பைப் பார்ப்பவர் ஹிருதயத்தில் ஊடுருவச் செலுத்தும். ஹிந்துக்களுடைய கல்விச் செல்வத்திற்கும், நாகரிகத்திற்கும் அதுவே உயிர்நிலை போன்றதாய், அந் நாகரிகத்தினுடைய அன்பு கனிந்துருகும் பாடல்களையும், அர்த்தசாரம் நிரம்பிய வேதாந்தத்தையும் மனதிலேற்படுத்த ஆதாரமாயுமுள்ளது. ஆரியர்களுடைய கல்வியறிவாகிய அறிவில் பூத்தது என்றும் அழிவற்ற மணத்தையுடைய ஷண்பக புஷ்பம்போன்ற அது தற்காலவாழ்வென்னும் கிரீஷ்மருதுவின் புழுதியிலும், காற்றிலும் தன் இதழ்கள் உதிரத்தொடங்கி, இன்னும் சிறிது காலத்தில் முற்றிலும் வாடி யழிந்துவிடும். ஆயினும், மானிடர்களின் ஹிருதயத்தில் அதனுடைய என்றும் மாறா மணமேனும் எக்காலமும் வசிக்குமாக!

---

## வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள்.

### I. பூரி, ஜகன்னாதம்

K. R. R. சாஸ்திரி M. A. F. R. Econ. S.

இந்தியாவெங்கும் "ஜகன்னாத்கீ ஜேய்" என்ற சப்தம் பிரதிபலிப்பது மிகையாகாது. "ஸர்வம் ஜகன்னாதம்" என்பதும் வெகு ஸாதாரணமான ஒரு மொழியாகும். இங்குள்ள, நம்மவரிற் சிலர் தென்னிந்தியாவிலுள்ள கோயில்களில் உட்பிராகாரத்தில் பிராமணரல்லாதாரை விடுவதில்லை என்று புகார் செய்வதும் நமக்குத் தெரிந்த விஷயமே. ஆனது பற்றியும், பகவான் ஜகன்னாதர் முன் நிலையில் ஸகல ஜீவராசிகளும் ஒன்று என்று விளக்கிக்காட்டும், பூரி ஜகன்னாதம் கோயிலைப் பற்றி யறியவேண்டிய தவசியமே.

#### பூரி க்ஷேத்திரத்திற்கு போகுதல்.

கிழக்கு இந்தியா இருப்புப்பாதையில் கர்தா ரோட் என்ற ஜங்ஷனில் பூரி ஸ்டேஷனுக்கு மாற்றவேண்டும். காலை 8-மணிக்கு முன் போய்ச் சேரும் ரெயிலில் பிரயாணம் செய்வது தான் உத்தமம். மதுரை தஞ்சாவூர் முதலிய விடங்களில் பட்டர் என்றும், குருக்களென்றும் நாம் யாரைச் சொல்லுகிறோமோ அவர்கள் அவ்விடத்தில் பண்டாக்கள் என்று கூறப்படுகிறார்கள். உரியா பாஷை பேசுமிட மாதலால், நம் தமிழாதிகளுக்கு கொஞ்சம் சிரமந்தான். ஒரு பண்டாவை நியமனம் செய்துவிட்டு, பூரிக்குள் நுழைவோம். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊர்போய்ச் சேரும் வரையில் பாதைகளின் புழுதியும், துர்நாற்றமும், ஸகிக்க முடியாமற்றானிருக்கிறது. இவ்வளவு கேவலமான சாலைகளில் திரள் திரளாக பைராகிகள் "ஜகன்னாத்கீ ஜேய்!" என்ற சப்தத்துடன் இதர ஜனங்கள் போவதையும் கவனிக்காது ஓடும்பொழுது, புழுதி மேகமண்டலம் வரை செல்லுகிறதென்றால் மிகை யாகவே யாகாது. புதுவிதமான வண்டிகளைப் பார்க்கிறோம்; நமது பட்டணங்களிலுள்ள கோச்சுவண்டியை எவ்வளவு அழகில்லாமல் செய்ய முடியுமோ அப்படி செய்தால், பூரியிலுள்ள வண்டிகள் என்று சொல்லலாம்; இந்நூதனமான வண்டிகளை இழுத்துச் செல்லும் பிராணிகளோ குதிரைகளுமல்ல, கழுதைகளுமல்ல—ஆனால் "ஒரு ஜாதிக் குதிரைகள்" என்று பண்டா என்னிடம் சொன்னார். யானைக்கால் அல்லது பெருங்கால் என்ற விகாரமான வியாதி இவ்வூரிலும் அதிகமாய் காணப்பட்டது. செம்புழுதியுள்ள சாலைகளையும், இந்த வியாதியையும் உற்று நோக்குமிடத்து, கும்பகோணத்துடன், பூரியை ஒப்பிடலாம்.

#### ஜகன்னாதர் கோயிலுக்கேகுதல்.

ஜகன்னாதர் கோயில் ஒரு விசித்திரமான கோபுரத்தை யுடையது. தென்னிந்தியாவிலுள்ள ஆகாயத்தை உராவி நிற்கும் சிவஸ்தல கோபுரங்களின் அழகும், ஆச்சரியகரமான கல்வேலைகளும், அதிற் கிடையாது. அல்லது நம் வைஷ்ணவ கோயில்களின் விமானம் மாதிரியுமல்ல. ஆனால், ஜெயினர் கோயிலைப் போலிருக்கிற தென்று சொல்லலாம். நமது கோயிற்களில், ஸ்திரீபுருஷர் லீலைகள் அரிதாய் காணப்படுகையில், பூரி கோபுரத்தில் எங்கு பார்த்தாலும் அவை விசேஷமாயிருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். தந்திர சாஸ்திர நிபுணர்களுக்குத்தான் காரணம் கூறமுடியும் போலும். கோயில் சற்று உயரத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

#### ஜகன்னாதர் தரிசனம்.

நம் கோயில்களிலுள்ள உட்பிராகாரங்கள் பூரியில் கிடையாது. எல்லோரும் பிரதக்ஷிணம் செய்கிற ஒரு வெளிப்பிராகாரம் மாத்திர மிருக்கிறது. கோயிலுக்குட் போய் பகவான் ஜகன்னாதரைத் தொட்டு தரிசனம் செய்யவேணுமாயின் காலை 8 மணிக்கு முன்னும் இரவு 8 மணிக்கு முன்னும் தான் முடியும். எங்கு பார்த்தாலும், திவ்ய நெய் விளக்குகளால் அவரவர் தீபாராதனை செய்கிறார்கள்; கோயிலிலுள்ள சில பண்டாக்கள் ஒரு சிறிய கம்பால் ஒவ்வொரு தர்சகரையும் அடித்து பாபத்தை போக்கடிக்கிறார்கள்; மூலஸ்தானத்திற்குள் போகலாம் என்று சொல்லியவுடன் உள்ளே வீற்றிருக்கும் ஜகன்னாதர், பலராமர், ஸுபத்ராதேவி ஆகிய மூன்று விக்கிரகங்களையும் தழுவி தரிசனம்

செய்கிறோம். ஜீவாத்மா பரமாத்மாவிடத்தில் ஐக்கியமடைகிறது போலும் எங்கு பார்த்தாலும் பக்தாவேசமும், "ஜகன்னாத்கீ ஜேய்!" என்ற சப்தமும் ஆகாயத்தை உலாவி செல்லுகின்றன. பகவத் ஸன்னிதானத்தில் ஜாதிமத பேதமில்லாமல் எல்லோரும் ஒன்று என்பதை ஒரு தரமாவது அறிகிறோம். இந்திய மக்கட்களில் எல்லோரையும் இங்கு பார்க்கலாம். அபிஷேகம், தீபாராதனை, பஞ்சகால பூஜைகள் முதலிய விசேஷ வெளிப்படையான ஆரவாரங்கள் நம் பிரதேசங்களைப் போல் இல்லாவிடினும், இக்கோயிலுக்குள் பக்தி வெகு சிலாக்யமென்றே சொல்லவேண்டும்.

### மார்க்கண்டேய தீர்த்தமும் கோவர்த்தன மடமும்.

பூரிகோயிலுக்கு சற்று வடக்கேயுள்ள மார்க்கண்டேய தீர்த்தத்தில் போய் ஸ்நானம் செய்வது வழக்கம். பகவான் ஜகன்னாதரைச் சார்ந்தவருக்கு ஆகாரத்தைப் பற்றி என்ன விசாரம்? பிரஸாதம் விசேஷமாய் பக்தகோடிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

பகவான் ஆதிசங்கரர் ஸ்தாபித்த ஐந்து மடங்களிலொன்றான கோவர்த்தன மடம் பூரி கடற்கரையோரத்திலுளது. அங்கு வெள்ளை பளிங்கக்கல்லில், வெகு அழகாய் வேலைசெய்திருக்கிற ஒரு பதுமையில் ஆதி சங்கரரது உருவம் உட்கார்ந்து பேசுவது போலிருக்கிறது. அத்வைத சிகாமணிகள் போய் தரிசித்து ஆனந்தமடையுமாறு வேண்டிக்கொள்கிறேன். கோவர்த்தன பீடாதிபதியான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்ரீ மதுஸூதன தீர்த்தஜீ வயோதிகாவஸ்தையில் எழுந்து உட்காரவும் அசக்தராய் தற்காலத்திலிருக்கிறார். கடற்கரையினருகில் மடத்தின் அமைப்பும் பசுக்களின் கூட்டமும், வெகு அழகாயும், ரம்யமாயுமிருக்கின்றன.

**எல்லாம் வல்ல** ஜகன்னாதர் முன் எச்சாதியினராயினுஞ் சரி, ஒன்றே என்றறிந்து, பொதுவாழ்க்கையிலும் இந்தியாவின் முன்னேற்றத்திலும், **ஊக்கத்தைக் காண்**பிப்போமாக.

---

### நான் கண்ட காக்ஷி.

நேற்று ரதசப்தமி புண்ணியகாலமாதலால் காலையில் எழுந்திருந்து மைலாப்பூர் திருக்குளத்தில், ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் செய்துவிட்டு மடி வஸ்திரமுடுத்து கோவிலுக்குப் போய், ஸ்வாமி தரிசனம் செய்யலாமென்று போனேன். அங்கு ஒரே நிச்சப்தமாய் இருந்தது. ஸ்வாமிக்கு ஏன் இன்னும் காலை தீபாராதனை செய்யவில்லை என்று கேட்க, குருக்கள் ஈசுவராதிகள் எல்லாம், ஜீவன் முக்தி க்ஷேத்ரமான சிதம்பரத்தில் ஒன்றுகூடி ஆலோசிப்பதற்காக போய் இருப்பதாயும், வந்த பிறகு தான் தீபாராதனை செய்யப்படுமென்றும் சொல்ல, நானும், இதென்ன அதிசயம்! தெய்வங்களுக்குக்கூட ஆலோசனை சபையா! மானிடர்களான நாம்தான், தெருத்தெருவாய், ஊர்ஊராய் கூடி பிதற்றிக்கொண்டு திரிகிறோம். த்ரிகால ஞானிகளான தேவர்களே ஒன்றுகூடி ஆலோசிப்பது என்றால் மிகவும் ஆச்சர்யமாய் இருக்கின்றது என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு உடனே சிதம்பரத்திற்கு புறப்பட்டுப் போய் ஈசுவராதிகளை தரிசனம் செய்து அவர்கள் மந்திராலோசனையை செவியுற்று, ஆநந்தக் களிப்புற வேண்டுமென்று அவாக்கொண்டவனாய், பகவான் இல்லாத கோவிலில் இருப்பது சரியல்லவென்று எண்ணி வெளி வந்தேன். உடனே எனது இல்லம் சென்று எனது மனையாட்டியிடம் ஏதோ அவசர காரியமாய் சிதம்பரம் வரையில் போய்வருவதாய் கூறிவிட்டு, நானும் வருவேன் என்று காலைக்கட்டிய எனது நாலுவயதான மூத்தகுமாரன் நடராஜனையும் வாழைப்பழத்தைக் கொடுத்து சமாதானம் செய்து, நல்ல பொம்மையும், பொம்பரமும் வாங்கி வருவதாய் ஆசை வார்த்தை மொழிந்து என் மனைவி, "எப்பொழுதும் இப்படித்தான், குழந்தைக்கு தெரியாமல் போகக்கூடாதோ, அவனை கதற கதற விட்டுத் தானா போகவேண்டும்" என்று முணுமுணுத்ததையும் காதில் வாங்காமல், எனது மடிஸஞ்சியில் வேண்டிய துணிமணிகளை வைத்துக்கொண்டு ரயிலடிக்கு வந்து சேர்ந்தேன். நான் சீக்கிரமே வந்து விட்டதால் வெகுநேரம் காக்க வேண்டியதாய் இருந்தது. என்னிடம் குருக்கள் சொன்ன விஷயத்தை ஒருவரிடமும் வாயைத் திறவாமல் சிதம்பரத்திற்கு ஓர் டிக்கிட்டு வாங்கிக்கொண்டு மறுநாள் காலை சிதம்பரம் வந்து சேர்ந்தேன். அங்கு ஓர் தீக்ஷிதர் வீட்டில் மடிஸஞ்சியை வைத்துவிட்டு ஸ்நானம் செய்து கட்டுக்கட்டாய் விபூதி அணிந்து, பார்ப்பவர் திகைக்க ருத்திராக்ஷ மாலைகள் பூண்டு நடராஜ தரிசனம் செய்ய சென்றேன்.

அவ்விடம் ஒரே ரத்ன கசிதமான விமானங்களும் இந்திரனுடைய ஐராவத முதலிய வாகனங்களும் வந்து நிறைந்திருந்தன. மெள்ள அக் கூட்டத்தினிடையே உட்சென்றதும், விதவிதமான மகுடங்களும், ஆபரணங்களும் அணிந்த தேவர்கள் எண்ணிறந்தவர்கள் ஓர் புறம் வீற்றிருக்க, ஓர்புறம் ஓர் மேடை உயர்த்தி அதில் உயர்ந்த சிங்காதனங்களில் நடராஜர், திருவாரூர் தியாகராஜர், மதுரை சுந்தரேசர், திருப்பதி வெங்கடாசலபதி, மைலாப்பூர் கபாலீச்வரர், கும்பகோணம் கும்பேசுவரர், திருவிடமருதூர் மாகாலிங்கம் இன்னும் மற்றுமுள்ள ஸ்தலங்களிலுள்ள ஈசுவராதிகள் எழுந்தருளியிருந்த காக்ஷியை ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலேயும் எடுத்துரைக்க இயலாதாயின் கேவலம் மானிடப்பதரான யானோ வல்லவன். அவர்கள் ஒவ்வொருவர் சிம்மாதனத்தின் பின்புறத்தில் அவரவர்கள் பெயருடன் சீட்டுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. யாவரையும் ஒருமிக்க நோக்க எனக்கு ஒன்றும்தெரியாமல் திக்பிரமை கொண்டவனானேன். நாற்புறமும் நறுமணம் மூக்கை கட்டியிழுத்தது. கண்களோ தேஜஸ்ஸைப் பார்க்க பொறுமல் மழுங்கின. உடலோ பரவசமாய் தன்னை மறந்து பேரின்ப வெள்ளத்தில் முழுகி ஏழை யான் செய்த பாக்கியம் என்னமோவென்று புலம்பி நின்றது.

இச்சமயத்தில் ஓர் கம்பீரமான சப்தம் செவிகளை பரவசமாக்கியது. தேவேந்திரன் இச்சபைக்கு காரியதரிசியாய் அமைக்கப்பட்டு, இவ்வபூர்வமான காக்ஷி பூலோகத்தில் நடைபெறும் ஓர் குழப்பத்தை அடக்குவதற்காக வென்றும், அதாவது கோவில்கள், மடங்கள் இவைகளுக்காக பண்டைகாலம் தொட்டு எவ்வளவோ பக்த சிகாமணிகளால் அர்ப்பணம் செய்யப்பட்ட சொத்துக்களை அதில் வரும் வருமானங் கொண்டு இதுகாறும் கோயிலின் கட்டளைகள் நடைபெற்று வந்ததும் இப்பொழுது மானிடர்களில் புதிதாய் தலைவர்களாய் ஏற்படுத்தப்பட்ட சிலர் அதில் மீறுகும் பாகத்தை இதர தர்மங்களுக்கும் ராஜீய செலவுக

ளுக்காகவும் ஏற்படுத்த முன்வந்திருப்பதையும் அது நம்மையே பெரும்பான்மையும் சம்பந்தப்பட்டதாய் இருப்பதால் அதைப்பற்றி கலந்து யோசிப்பதற்காக இச்சபை இன்று கூடியிருக்கின்றது என்று விளம்பரம் செய்தான். செல்வத்தில் முதன்மையானவரான வெங்கடாசலபதி இதை செவியுற்று, தன் செல்வத்திற்கு எங்கு ஹானி ஏற்பட்டுவிடுமோ வென்று பயந்தவராய் முன்வந்து தன் பட்டை நாமம் நெற்றியில் விளங்க தன் உடம்பை சிலிர்த்து நிமிர்த்திக்கொண்டு இதைப்பற்றி சிந்திப்பது மிகவும் முக்கியமான தென்றும் அதற்காக விருத்தரான தியாகராஜரை அக்கிராசனாதிபதியாய் தான் தேர்ந்தெடுப்பதாயும் அவரையே தன் நண்பர்கள் ஆமோதிப்பார்கள் என்று தான் நம்புவதாயும் கூற, யாவரும் அதுவே சரி என்று கரகோஷம் செய்ய, தியாகராஜர் மெள்ள நடந்து நடுவில் போடப்பட்டிருந்த சிம்மாஸனத்தில் அமர்ந்தார். அவர் முதிர்ந்த பருவத்தின் அடையாளங்கள் அவர் தேகமுழுவதும் காணப்பட்டது. கருத்த மேனியும், நரைத்த தலையும், செறிந்த புருவமும், தொங்கிய சதைகளும் மழுங்கின பார்வையையும் மூடிய கண்களையு முடையவராய் இருந்தார். ஓர் தடியை ஊன்றிக்கொண்டு ஒருகால் மேலும் ஒருகால் கீழுமாய் நின்று சபையோரை நிதானமாய் நோக்கிவிட்டு பின்வருமாறு மெதுவான குரலில் பேசலானார்.

மறையோர்களே! சகோதரர்களே! எனக்கு இப்பொழுது நீங்கள் அளித்த கௌரவத்திற்காக நான் மிகவும் சந்தோஷமுள்ளவனாக விருக்கிறேன். இச்சபை கூடியிருப்பதின் கருத்து தேவேந்திரனால் உங்களுக்குச் சொல்லப்பட்டது. மேலும் நாம் செய்ய வேண்டிய விஷயங்களுக்கும், இப்பொழுது நமக்கு கவலை யுண்டுபண்ணியிருக்கும் விஷயத்தையும் பற்றி நண்பர் மகாலிங்கம் நன்கு எடுத்துக் கூறுவார் என்று மொழிந்து ஆசனத்தில் அமர்ந்ததும் ஜோதிர்மயம் என்று பெயர் புனைந்த மகாலிங்கம் தன் தேஜஸால் எல்லாருடைய நேத்திரங்களையும் மழுங்கச்செய்து எழுந்து கூறலானார்.

சகோதரர்களே! இதுகாறும் மானிடர்கள் தம்மை பற்றியவரையில் ஏதேதோ வியவகாரங்கள் செய்து வந்தனர். நாமும் சிறிது பாராமுகமாகவே இருந்துவந்தோம். இப்பொழுதோ வெனில் நம்மிடமே தங்கள் வால்களை ஆட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இனியும் சும்மாவிருப்போமாயின் நாம் எல்லோரும் இருந்த இடம் தெரியாமல் இவ்வுலகை விட்டு ஓடிவிடவேண்டி யிருக்கும். அப்புறம் நம்மை கவனிப்பவர் இவ்விடம் யாருமிலர். பண்டைகாலம் தொட்டு நம்மிடமுள்ள பக்தியின் பெருக்கால் அர்ப்பணம் செய்யப்பட்ட ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களை நமக்குயரி செலவுகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டு மிகுதியிருக்கும் பாகத்தை இவர்கள் கொள்ளை கொள்வதாக நிச்சயம் செய்துவிட்டார்கள். அதைக்கொண்டே தர்மாஸ்பத்ரிகளும், சாலைகளை பழுதுபார்ப்பதும், அவைகளுக்கு வெளிச்சம் போடுவது இன்னும் பலவிதமான சீர்திருத்தங்கள் செய்யப்போவதாய் கேள்விப்படுகிறோம். மற்றும் பிறரறியாயல் தங்களுக்கு அகப்பட்டவரையில் அபஹரிக்கவும் ஏற்படுவார்கள். நாம் சும்மாவிருப்போமாயின் ஜனங்களுக்கு நம்மிடம் நம்பிக்கையும், பக்தியும் பிறக்குமோ! அவர்கள் தெய்வீக காரியங்களும் நிலைகுலைந்துவிடும். கோவில்களுக்கு போவதையும் மெள்ள நிறுத்திவிடுவார்களன்றோ! நமக்காக இல்லாவிடினும் உத்ஸவாதிகளின் சிறப்பையும், ஆடம்பரத்தையுமாவது பார்க்க ஆவல்கொண்டு வெகு தூரங்களிலிருந்து வரும் யாத்ரிகர்களும், இவர்கள் சட்டதிட்டமாய் ஏற்படுத்தும் கட்டளைகளினால் சிறப்புக்குறைய, நின்று விடுவார்கள். நம்முடைய கோவில்களையே இருப்பிடமாயும், நாமே ஆசிரயமாயும் இருக்கும் குருக்கள்மார்களும் மனமுடைந்து மெலிந்து விடுவார்கள். நம்மிடம் அபிமானக் குறைவு ஏற்படும் காலங்களில் நமக்கு அபிஷேகமும், நிவேதனமும் தடுமாற்றத்தில் வந்துவிடும். இந்த கிளர்ச்சியை ஏதாவது உபாயங்கொண்டு நடைபெறாமல் தடுத்துவிடவேண்டும். மானிடர்கள் வரவர செய்யும் துஷ்கிருததியத்தின் பலனாய் நாம் எவ்வளவோ தன தான்ய சேதங்களையும், அகால மரணத்தையும், பஞ்சத்திற்கு அவர்களை ஈடுபடும்படியாயும் செய்துவந்தும் அவர்கள் கேவலம் அகங்காரத்தினால் உண்மை உணர்ந்தார்கள் இல்லை. நமக்குற்ற அபாயத்தை தடுக்கும் விஷயத்தில் என் நண்பர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து ஏதாவது ஓர் உபாயம் தேடிவித்து என்னையும் கௌரவிப்பார்கள் என்று நம்புகின்றேன். என்று கூறி, உட்கார்ந்ததும், எல்லோரும் ஒரே வாக்காய் ஆம், ஆம், உடனே தடுத்துவிடவேண்டுமென்று ஆரவாரித்தனர். அக்கிராசனாதிபதி மீண்டு எழுந்திருந்து தனது அபிப்பிராயத்தை வெளியிடலானார்.

என் சகோதரர்களே, நமது நண்பர் மகாலிங்கம் கூறியது யாவையும் உண்மையே. அவர் எல்லாவற்றையும் உங்களுக்கு தெளிவாய் விளக்கி காட்டியிருக்கிறார். ஆனால் மானிடர்களுக்குள்ளேயே இருவகை கக்ஷிகள் இருப்பதாய் தெரியவருகிறது. அநேகமாய் தற்சமயம் இந்த ஏற்பாடு நடைபெறாதென்றே எனக்கு தோன்றுகிறது. சற்று யோசித்தே நாம் உபாயம் தேடலாமென்று எண்ணுகிறேன். நாம் மானிடர்களை குற்றம் சொல்வதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நாம் முன்பே கலிக்கு முழுவதிகாரமும் அளித்துவிட்டோம். இதெல்லாம் அவன் குறும்பே ஒழிய அவர்கள் குற்றமில்லை. சிறிது கவனமின்மையால் அவனுக்களித்த உரிமைகளை இப்பொழுது தடைபடுத்துவது நம்முடைய கௌரவத்திற்கு பொருத்தமாயிராதாகையால், காலத்தின் போக்கிற்கே எல்லாம் உட்பட வேண்டியது தான். ''பொருத்தார் பூமியாள்வார்'' என்பதிற் கிணங்க சற்று தாமதித்தே ஏற்பாடு செய்வோம் என, இந்திரனும் எழுந்திருந்து, சபையோர்களுக்கும் அக்கிராசனாதிபதிக்கும் வந்தனமளித்து சபை கலைந்துவிட்டதாய் கூற, யாவரும் மிகுந்த வியப்புடன் கூட்டம் கூட்டமாய் கலைந்து பேசிக்கொண்டு தங்கள், தங்கள் விமானங்களிலும், வாஹனங்களிலும் ஏறி தேவலோகம் செல்ல ஈசுவராதிகளும் அவரவர்கள் கோயில்களுக்குட், புகுந்தனர். நானும் மிகவும் வியப்படைந்து பட்டணம் திரும்பினேன். இதுவெல்லாம், கனவோ, நினைவோ, எனக்குத் தெரியவில்லை!

---

“பைந்தமிழ்” சித்திர விளக்கத்துடன் உள்ள ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை வரப்பெற்றோம். அதில் அரிய தமிழில் வெகு நல்ல நடையுடனும் சுவையுடனும் பலபிரபல வித்வான்களால் எழுதப்பட்ட அநேக வியாசங்கள் உள்ளது. தமிழ் நாட்டு ஆண் பெண்களுக்கு அறிவை யூட்டுவது.

**பைந்தமிழ் ஆபீஸ். திருவல்லிக்கேணி.**

ஏல்லாவித வியாதிகளுக்கும் ஆயுர் வேத மருந்தே மிகவும் நன்மையானது.

மருந்து விபர ஜாப்தா இனாம். உடனே தங்கள் விலாசம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஸ்ரீ நடராஜ ஔஷத சாலை.

50, Narayana Mudali, Street,

G. T. MADRAS.

## பாண்டவ சரித்திரம்.

மஹாபாரதம் பூராவும், கதைப்போக்கில், எளிய நடையில், இனியதமிழில் சிறுவரும் உற்சாகத்துடன் படிக்கும்படி எழுதப்பட்டது உயர்ந்த காகிதம் காலிகோ பயிண்டு 400 பக்கங்கள் விலை ரூபா 2 4 0

வி. நாராயணன் கம்பெனி,
நெ. 4, கொண்டிசெட்டி தெரு,
மதராஸ்.

## ஜனரஞ்சனி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேசசரித்ரம், சாஸ்த்ரங்கள் மதசம்மந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறுகதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமானபல வியாஸங்கள் அடங்கியது.

| | |
|---|---|
| வருஷ சந்தா ரூபாய் | 2 0 0 |
| மேல் நாடுகளுக்கு ரூபாய் | 3 0 0 |
| மாதிரிப்பிரதி அணா | 2 0 0 |

"ஜனரஞ்சனி" ஆபீஸ்
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

## பாரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒரு புறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழிநிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வுற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர்நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச்சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டுமென்பதே இந்நூலில் நோக்கமாகும்.

விலை ரூபா 1—0—0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

இனாம்! இனாம்!!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தேன்பதை
நமது

## காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடைக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

உபயோகமுள்ளது!!

சுதேசியமானது!

## அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

| படைமருந்து | பற்பொடி | மோஹினி தைலம் |
|---|---|---|
| டப்பி 1-க்கு 0—6—0 | டப்பி 1-க்கு 0—2—0 | டப்பி 1-க்கு 0—12—0 |

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

## பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

**SILK PITAMBER Co.,**
**BENARES CITY.**

**Telegrams: "Adimoorthi" Benares.**

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்,

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்,

கதர் துணிகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெ. 1. | 10 கஜம் | ×25" | ரூ. 2½ முதல் | ரூ. 3 வரை | |
| ,, 2. | 12 ,, | ×27" | ,, 4 | ,, 6 ,, | |
| ,, 3. | 16 ,, | ×34" | ,, 6 | ,, 9 ,, | |
| ,, 4. | 18 ,, | ×36" | ,, 8 | ,, 12 ,, | |
| ,, 5. | 20 ,, | ×44" | ,, 11 | ,, 13 ,, | |

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

| | | | | |
|---|---|---|---|---|
| 10 கஜம் | × 45" | ரூ. 4½ முதல் | ரூ. 6 வரை | |
| 9½ ,, | × 40" | ,, 3 ,, | 5 ,, | |
| 3 ,, | × 1½ கஜ | ,, 2 ,, | 3 ,, | |

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

**SHREE BANDAR,**
**Mandi Bans Street,**
**Moradabad, U. P.**

# GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

**Beautifully illustrated large descriptive catalogue free on application.**
(Please mention this paper when writing and correspond in English only.)

**Pestonjee P. Pocha & Sons**
**Seed Merchants, Poona.**

# The United India Life Assurance Co., Ltd.

**Head Office: Madras**
**(Established 1906)**

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

**Apply to:—K. S. Gopalayya,**
**MANAGER.**

இனாம்! இனாம்!!

அழகான 12 ஷீட் காலண்டர். தமிழ் இங்கிலீஷ் தேதியுள்ளது. ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி தங்கள் விலாசத்தை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள்; முந்துங்கள்.

சகல விதமான பட்டு தினுசுகளும்
காசி விலைக்கு கொடுக்கப்படும்.
:: ஒருமுறை பரிக்ஷியுங்கள் ::

## K. S. MUTHIAH & Co.,

**188, Govindappa Naick Street, Madras.**
**Head Office: BENARES.**